செய்தி வெளியீடு எண்–649 நாள் – 12. 8.2008

# செய்திக் குறிப்பு

## மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய பணிகள் குறித்து ஆய்வு

* * * * * * * * * * * * *

சட்டமன்ற நிதிநிலை அறிக்கை மற்றும் அறிவிப்புகளில் குடிநீர் திட்டங்களில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம் குறித்தும், இதர கூட்டுக் குடிநீர் திட்டப்பணிகளின் முன்னேற்றம் குறித்தும் மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் 12.8.2008 அன்று தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய கூட்ட அரங்கில் ஆய்வு செய்தார்.

இந்த ஆய்வுக்கூட்டத்தில் பின்வரும் விவரங்கள் மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் தெரிவிக்கப்பட்டன.

2007–08ஆம் ஆண்டில் 9625 குடியிருப்புகளுக்கு முழுமையான குடிநீர் வசதி அளிக்க இலக்கிடப்பட்டு, 12549 ஊரகக் குடியிருப்புகளுக்கு முழுமையான குடிநீர் வசதி அளிக்கப்பட்டது.

2008–09ஆம் ஆண்டில் 10255 ஊரகக் குடியிருப்புகளுக்கு குடிநீர் வசதி அளிக்க திட்டமிடப்பட்டு, இது காறும் 1767 ஊரகக் குடியிருப்புகளுக்கு குடிநீர் வசதி அளிக்கப்பட்டுள்ளது. மேலும், 4842 அங்கன்வாடி மையங்கள், 390 ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் குடியிருப்புகள், 379 அரசு பள்ளிகள் குடிநீர் வசதி பெற்றுள்ளன. புனரமைக்க இயலாத குடிநீர் தொட்டிகளுக்குப் பதிலாக 112 புதிய தொட்டிகளும், 926 பள்ளிகளில் புனரமைப்புப் பணிகளும் நிறைவேற்றப்பட்டு உள்ளன. இதுகாறும் 8 கூட்டுக் குடிநீர்த் திட்டங்களும், 8 நகரக குடிநீர் அபிவிருத்தித் திட்டங்களும் நிறைவேற்றப்பட்டுள்ளன.

கூட்டுக் குடிநீர்த் திட்டங்களில் தடையின்றி மின்சாரம் பெறும் வகையில் ரூ.65 கோடி செலவில் 111 தனி மின்பாதை அமைக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. இதுவரை 87 பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. எஞ்சியுள்ள 24 பணிகள் 31.10.2008க்குள் முடிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. கோயம்புத்தூர்–பில்லூர் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தில் ஏற்படும் குழாய்

உடைப்புகளை முற்றிலுமாக களையும் பொருட்டு இத்திட்டத்திற்கான தனி மின்பாதை அமைக்கும் பணியை விரைவில் நிறைவேற்ற உத்தரவிட்டார்.

திருநெல்வேலி மாவட்டத்தில் இந்த ஆண்டு நிறைவேற்றப்பட்ட ஆயக்குடி–அச்சம்புதூர் கூட்டுக் குடிநீர்த் திட்டம் மற்றும் பாளையங்கோட்டை, நாங்குநேரி, களக்காடு ஒன்றியங்களைச் சேர்ந்த 185 குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டங்களின் செயல்பாடுகள் பற்றி தெரிவிக்கப்பட்டது.

மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நிறைவேற்றப்பட்ட திட்டங்கள் சரியான முறையில் இயங்குகின்றனவா என்பதை வாரியப் பொறியாளர்கள் அவ்வப்பொழுது தல ஆய்வு செய்ய வேண்டும் என்று அறிவுறுத்தினார். கூட்டுக் குடிநீர்த் திட்டங்களில் அனைத்து குடியிருப்புகளும் தினசரி குடிநீர் பெறுவதை கண்காணிக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் செயல்படுத்தப்படும் மிகப்பெரும் கூட்டுக் குடிநீர்த் திட்டங்களான இராமநாதபுரம் கூட்டுக் குடிநீர்த் திட்டம் மற்றும் ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டப் பணிகள் பற்றியும் விரிவான முறையில் ஆய்வு நடத்தினார். இராமநாதபுரம் கூட்டுக் குடிநீர்த் திட்டப் பணிகளை மேலும் விரைவுபடுத்தி இலக்கிட்டபடி ஏப்ரல் 2009ல் நிறைவேற்ற அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்க அறிவுறுத்தினார். ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டப் பணிக்கு கலந்தாலோசகர் நியமனத்தை விரைவுபடுத்தி திட்டப் பணிகளை விரைவில் தொடங்க கேட்டுக்கொண்டார்.

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தில் தற்பொழுது ஆய்வில் உள்ள கீழ்கண்ட குடிநீர்த் திட்டங்களின் ஆய்வுப் பணிகளை விரைவுபடுத்தி திட்ட மதிப்பீடுகளை விரைவில் தயாரிக்க உத்தரவிட்டார்.

1. வேலூர் மாவட்டத்தில் வேலூர் மற்றும் 12 நகராட்சிகள், 11 பேரூராட்சிகளுக்கு மேட்டூர் அருகில் காவிரியாற்றை நீராதாரமாகக் கொண்டு 952 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 15 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில் கூட்டுக் குடிநீர் திட்டம்.

2. விருதுநகர் மாவட்டத்தில் 7 பேரூராட்சிகள் மற்றும் 11 ஒன்றியங்களைச் சார்ந்த 1457 குடியிருப்புகளுக்கு தாமிரபரணி ஆற்றை நீராதாரமாகக் கொண்டு 250 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 10 இலட்சத்து 20 ஆயிரம் மக்கள் பயன்பெறும் வகையில் கூட்டுக் குடிநீர் திட்டம்.

3. புதுக்கோட்டை மாவட்டத்தில் புதுக்கோட்டை, விராலிமலை, குன்னான்டார்கோவில், அன்னவாசல், பொன்னமராவதி, கந்தவர்க்கோட்டை

மற்றும் திருமயம் ஒன்றியங்களைச் சார்ந்த 2048 குடியிருப்புகளுக்கு 125 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 5 இலட்சத்து 90 ஆயிரம் மக்கள் பயன்பெறும் வகையில் கூட்டுக் குடிநீர் திட்டம்.

தூத்துக்குடி மாநகராட்சியில் புதிதாக இணைக்கப்பட்டுள்ள ஊரகப் பகுதிகளுக்கும் சேர்த்து தாமிரபரணி ஆற்றை நீராதாரமாகக் கொண்டு புதிய குடிநீர் மேம்பாட்டுத் திட்டத்திற்கான ஆய்வுப் பணிகளை உடனே ஆரம்பிக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உத்தரவிட்டார்.

மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கடந்த இரண்டு ஆண்டுகளில் நிறைவேற்றப்பட்ட திருநெல்வேலி மாநகராட்சி, கரூர்–இனாம் கரூர் நகராட்சி, தஞ்சாவூர் நகராட்சி, மயிலாடுதுறை நகராட்சி, திருச்சி மாநகராட்சிகளுக்கான பாதாள சாக்கடைத் திட்டங்களின் செயல்பாடுகள் பற்றி ஆய்வு செய்தார். வீட்டிணைப்புகளை அதிகம் பெற்று இப்பாதாள சாக்கடைத் திட்டங்களை முழுமையான பயனுக்குக் கொண்டுவர உத்தரவிட்டார். தற்பொழுது செயலாக்கத்தில் உள்ள பாதாள சாக்கடைத் திட்டங்களில் உள்ள இடர்பாடுகளைக் களைந்து பணிகளை விரைவில் முடிக்கவும் உத்தரவிட்டார்.

தற்பொழுது ஏற்பட்டுள்ள கட்டுமானப் பணிகளின் விலையேற்றத்தால் திட்டப் பணிகள் பாதிக்காமல் தக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்பதை அரசு முதன்மைச் செயலர் மற்றும் வாரிய மேலாண்மை இயக்குநர் ஆகியோர் அமைச்சரிடம் விளக்கினர். வாரியப் பணிகளின் முன்னேற்றம் குறித்து மனநிறைவு தெரிவித்த அமைச்சர் அவர்கள், 2008–09 நிதியாண்டில் செயல்படுத்தப்படும் திட்டங்களை குறித்த காலக்கெடுவுக்குள் நிறைவேற்றி மக்கள் பயனுக்குக் கொண்டு வர அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார்.

இந்த ஆய்வுக் கூட்டத்தில் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறை , அரசு முதன்மைச் செயலர், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய மேலாண்மை இயக்குநர் மற்றும் உயர் அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

வெளியீடு – இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9.